# பாடாண்திணையில் பண்பாடு

**முனைவர் ஷி.ஃ.பா**

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி,இளையான்குடி-630702

சிவகங்கை மாவட்டம், கைபேசி எண்:9750493909

---

## முன்னுரை

வள்ளல்,மன்னர்,கடவுள் போன்றோரைப் பற்றிப் புகழ்ந்து பாடும் பாடல்களே பாடாண் ஆகும். பாடு + ஆண் எனப் பிரித்து பெருமையை ஆளும் தன்மை என்றும் பொருள் கொள்ளலாம்.ஆண் என்பதற்கு ஆடவனது ஒருகலாறு என்று **நச்சினார்க்கினியர்** பொருள் கூறுவர்.பாடு என்பதற்கு பெருமை என **சோமசுந்தரபாரதியார்** பொருள் கூறுவர்.பாடு என்பதற்கு முறைமை,செவ்வி,பெருமை,ஒலி,ஒழுக்கம் என முப்பத்திரண்டு பொருள் உண்டு.ஆண் என்பதற்கு ஆளுமை என்றும் பொருள் கொள்ளலாம்.இக்கருத்தினையொட்டி வெள்ளைவாரணர் கூறும்போது,"புலவர் பாடும் புகழினை விரும்பி தலைவர் தம்முடைய அறிவு,திரு,ஆற்றல்,ஈகை முதலிய பெருமிதப் பண்புகளை ஆளுதல் தன்மையாகிய ஒழுகலாற்றைக் குறித்து வழங்குவதே பாடாண் என்னும் சொல்லாகும்" என்கிறார்.இப்படிப்பட்ட பாடாண்திணையில் பண்பாட்டை எடுத்துரைக்கும் பொருண்மையில் இக்கட்டுரை அமைகிறது.

## பாடாண்திணை - தொல்காப்பியர் தரும் விளக்கம்

பாடாண்திணையைப் பற்றித் தொல்காப்பியர் கூறும்போது,

**பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே**

**நாடுங் காலை நல்லிரண் டுடைத்தே. (தொல்:பொருள் - 1026)**

என்கிறார்.பாடாண்திணை எனும் புறத்திணை கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனாகும். மேலும் இத்திணையைத் தொல்காப்பியர் இரண்டாகப் பகுப்பார்.அவை,ஒன்று

**அமரர்கண் முடியும் அறுவகையானும்**

**புரைதீர் காமம் புல்லிய வகையினும்**

**ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப. (தொல்: பொருள் - 1027)**

கடவுளிடத்து முடியும் கொடிநிலை அல்லது தேவர்களிடத்து முடியும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை,புகழ்தல்,பரவல் என்பவற்றினும்,குற்றந்தீர்ந்த காமத்தைப் பொருந்திய வகையில் அவையிற்றின் ஒரு கூற்றின் பாகுபாடு கடவுள் புகழ்ச்சியில் வருதலேயன்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்திப் பாடாண் திணையாவதற்கும் பொருந்தும்.இரண்டாவதாகக் கூறுவது,

**வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇய**

**பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்**

**முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை**

**வண்ணப் பகுதி வரைவின் றாங்கே.(தொல்:பொருள் - 28)**

ஒரு தலைவன் தன்னைப் பிறர் வாழ்த்தலும்,புகழ்ந்துரைத்தலும் கருதிய பக்கத்திடத்தும் அறம்,பொருள்,இன்பங்களின் கூறுபாடு தோன்ற முன்னோர்கள் கூறிய குறிப்புப் பொருள் செம்மையாகக் கூறும் துறை நிலை பெற்று வழங்குதல் இயலுமிடத்து,விகார வகையின் அமரராக்கிச் செய்யும் கொடிநிலை முதலிய அறுவகை வாழ்த்தினைப் போல் அல்லாது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதலும் வரையறுத்து நீக்கப்படாதனவாகும் எனத் தொல்காப்பியர் கூறுவர்.

## பழந்தமிழரின் பண்பாடு

பழந்தமிழர்கள் கொண்டுள்ள வாழ்க்கை நிலையும்,பழக்க வழக்கங்களும்,நாகரிகமும்,பண்பாடும் போர்ச் செய்திகளும்,அரசியல் வாழ்க்கையும்,ஆடவர் ஆற்றலும்,பெண்டிர் பெருமையும் சங்கப்பாடல்கள் வாயிலாக அறியலாம்.

பாடாண்திணைப் பாடல்களில் பழந்தமிழரின் பண்பாட்டை நோக்குங்கால் ஆண்மகனின் ஒழுகலாற்றைக் காணலாம்.ஆண்மகன் வீரம் செறிந்தவனாகத் திகழ்வதைப் பாடாண்திணைப் பாடலின் வாயிலாக அறியலாம்.

பாண்டியன சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனின் வீரத்தின் தன்மையை,கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் தனது பாடாண்திணைப் பாடலின் வாயிலாக உணர்த்தும் போது,

**காய்சினம் தவிராது கடல் ஊர்பு எழுதரும்**

**ஞாயிறு அனையை நின் பகைவர்க்கு.(புறநானூறு: 59:5-6)**

என்கிறார்.இதில் கதிரவனின் ஆற்றலையும் தன்மையையும் மன்னனுக்கு சான்று பகிர்கின்றார்.சங்க காலத்தில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடு இன்றி நல்லோரைப் புகழ்தலும்,இழிந்தோரை இகழ்தலும் சான்றோர்க்குப் பொருள் வழங்குதலும்,பெரியோரை மதித்தலும் உயர்ந்த பண்பாடாகத் திகழ்ந்தன.அதியமான் நெடுமான் அஞ்சி பெரும் வேந்தனாக இருப்பினும் தன்னைப் புகழும் புலவரைச் சிறப்பித்து வேண்டிய பொருளைக் கொடுத்து அன்போடு வழியனுப்பும் தன்மையை நோக்கும் போது அதியனின் உயர் பண்பை உணரலாம். ஔவையார் வேந்தனை செந்நாப் புலவர் எனப்புகழும் தன்மையினைக் காணும்போது அரசன் பொய் கூறாதவன் என்பதை அறியலாம். இது போன்று,செந்நாப் புலவர் என்றும் குறிப்பிடுவதை அறியலாம்.அக்கால அரசர்கள் நீதி வழுவாது,புறங்கூறாது வாழ்ந்தனர் என்பதைப் பாடாண்திணைப் பாடலின் வாயிலாக உணரலாம்.அக்காலப் புலவர் பெருமக்களிடையே திகழ்ந்த குணப்பண்புகளுள் சிறப்பாக நோக்கத்தக்கது அழுக்காறின்மையாகும். இதனை வள்ளுவர்,

**ஒழுக்காறாக் கொள்கை ஒருவன்தன் நெஞ்சத்து**

**அழுக்காறு இல்லாத இயல்பு. (குறள் - 161)** என்பர்.

## சமுதாயச் சிந்தனைகள்

ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் வசதி படைத்தவர்களாக இருத்தல் வேண்டும்.எல்லாத் தேவைகளையும் எளிதில் நிறைவு செய்து கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.இந்நிலையில் மக்கள் வாழும் நாட்டை முன்னேறிய நாடு என்பர்.சங்ககாலத்தில் இத்தகையதொரு மேம்பட்ட வாழ்வை மக்கள் பெற்றிருந்தார்கள் ஆகையால் தான்,சங்க காலத்தைத் தமிழகத்தின் பொற்காலமென்று இலக்கிய வரலாற்றாசிரியர்கள் இயல்புகின்றனர்.தமிழ் மொழியும்,தமிழர் வாழ்வும் அக்காலத்தில் மேலோங்கி இருந்தமையைச் சங்க நூற்கள் கொண்டு அறியலாம்.

செல்வம் பெற்றவர்கள் அச்செல்வத்தைப் பிறர்க்குப் பகிர்ந்தளித்தலை ‘அறம்’ எனக் கருதினர்.இதனை,

**செல்வத்துப் பயனே ஈதல்**

**துய்ப்பே மெனினே தப்புந பலவே.(புறம்:189:7-8)**

என்ற புறநானூற்றுப் பாடல் வாயிலாக அறியமுடிகிறது.

வள்ளலிடம் சென்று வளம் பல பெற்றவன் பெறாதவனுக்கு அத்தகு வளம் பெறும் வழி துறைகள் கூறிய பண்பாட்டிலக்கியங்களாக ஆற்றுப்படை இலக்கியங்கள்

திகழ்கின்றன.சான்றாக ஔவையார் அதியமானிடத்து பரிசு பெற்றுவரும் வழியில் விறலியைப் பார்க்கிறார்.அவளின் ஏழ்மையைக் கண்டு,அதியமானின் சிறப்பை அவளிடத்துக் கூறி,அவன் பரிசில் தருவான்.அதனைப் பெற்று வாழ்வாயாக என்கிறார் ஔவையார்.

## பெண்ணின் பெருமை

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பெண்கள் முன்னேற்றம் பற்றித் தனிப்படப் பேச வேண்டிய நிலையுள்ளது.ஏதோ ஒரு காலத்தில் பெண்கள் அடிமையாக்கப்பட்டார்கள். ஆடவர்களின் போகப் பொருளாக்கப்பட்டார்கள்.அந்த அடிச்சுவடு இன்றும் இருப்பதால் தான் பெண்ணடிமை தீர,பலர் இன்று பேசியும் எழுதியும் வருகின்றனர்.தொல்காப்பியர் தம் காலத்திலேயே,

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**

**அறிவும் அருமையும் பெண்பாலான.(தொல்:பொருள் - 1155)**

என்று பெண்மையை உயர்த்திக் காட்டுகிறார்.மேலும்,

**அறம்புரி மக்களொடு கிழவனும் கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.(தொல்:பொருள்:கற்பியல்-சூ.51)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதால் வீடுபேறு அடைவதற்குப் பெண்ணின் பங்கு சமபங்காகின்றது.தனக்கு நரை உண்டாகாமைக்குக் காரணம் கூறும் பிசிராந்தையார் தம் மனைவியும் மக்களும் அறிவு நிரம்பி இருந்தமையையும் ஒரு காரணமாகக் கூறுவதை,

**மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினா.(புறம் - 191 – வ . 3)**

என்பதன் மூலம் அறியலாம்.இத்தகைய பெண்களுக்கு இடைக்காலத்தில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று கல்வி மறுக்கப்பட்டிருக்கின்றது.இப்படிப்பட்ட நிலைமாறி இன்று பெண்களின் நிலை உயர்த்தப்பட்டிருப்பதே பண்பாட்டின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

## பாடாண்திணைத் துறையில் பண்பு

பாடாண்திணையில் இயன்மொழி,வாழ்த்தியல்,வாண்மங்கலம்,பரிசில் கடாநிலை, விறலியாற்றுப்படை, பரிசிற்றுறை,கடைநிலை,பரிசில் விடை எனத்துறைகள் பல அமைந்துள்ளன.

## இயன்மொழி

தனக்கு ஒன்றைக் கொடுத்தோரைப் புகழ்தலும்,கொடுக்காதவரைப் பழித்தலும்,வெற்றியினாலும்,குணச்சிறப்பினாலும் உயர்ந்து நிற்போரைப் புகழ்ந்து கூறுவது இயல்மொழி வாழ்த்தாகும்.இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடும்போது,

**கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்**

**அடுத்தூர்ந்த தேத்திய இயன்மொழி வாழ்த்தும்.(தொல்:பொருள்:1036-1-2)**

என்கிறார்.இதனையே,

**இன்னோ ரின்னவை கொடுத்தோர் நீயும்**

**அன்னோர் போல வமையெமக் கீகென**

**என்னோடு மறிய வெடுத்துரைத் தன்று.(கொளு-194)**

என்று புறப்பொருள் வெண்பாமாலைக் குறிப்பிடுகின்றது.

இப்பாடல் வழி,இத்தன்மையோர் இத்தன்மை வழங்கினார்,நீயும் அத்தன்மையோர் போல் அப்படியான பொருள்களை.எமக்குத் தருவாயாக என்று சொல்லி,எத்தன்மையோரும் உணர உயர்த்திச் சொல்லிய பாங்கு புலனாகிறது.

## கடைநிலை

கடைநிலை என்பது தூரத்திலிருந்து வருகின்ற வருத்தம் தீரும்பொருட்டு வாயிலைக் காத்து நிற்போருக்கு உரைத்த வாயில் நிலையேயாகும்.இதனைத் தொல்காப்பியர்,

**சேய்வரல் வருத்தம் வீடவாயில்**

**காவலர்க் குரைக்க கடைநிலையானும்.(தொல்:புறத்திணையியல் 35)**

என்கிறார்.இதனைப் புறப்பொருள்வெண்பாமாலை,

**புரவல னெடுங்கடை குறுகிய வென்னிலை**

**கரவின் றுரையெனக் காவலர்க் குரைத்தன்று.(கொளு:190)**

என்று குறிப்பிடுகின்றது.இதன் மூலம் அரசனுடைய நெடிய வாயிலைக்கிட்டிய என் வரவினை மறைவின்றிச் சொல் என வாயில் காவலனுக்குச் சொல்லியது என்பது தெளிவாகிறது.

**வாண்மங்கலம்**

**கயக்கருங் கடற்றானை**

**வயக்களிற்றான் வாள் புகழ்ந்தன்று.(கொளு:223)**

பகைவரால் கலக்குதற்கு அரிய கடல்போலும் சேனையினையும்;வலிய யானையினையும் உடையான் வாளைப் புகழ்ந்து கூறும் வகையில் இத்துறை அமைந்துள்ளது.இதனைத் தொல்காப்பியர்,

**மாணார்ச் சுட்டிய வாள்மங்கலம்.(தொல்:பொருள்:1037)**

என்று குறிப்பிடுகிறார்.

**பரிசில் விடை**

அரசன் தனது உள்ளம் மகிழும்படி தன் வெற்றியால் உண்டான புகழைக்கூறிய பரிசிலர்க்கு பரிசில் பொருளை வழங்கி அவர் இன்புறும்படி விடை கொடுத்தல் பரிசில் விடையாகும்.இதனைப் புறப்பொருள்வெண்பாமாலை,

**வேந்தன் உள் மகிழ வெல்புகழ் அறைந்தோர்க்கு**

**ஈந்து பரிசில் இன்புற விடுத்தன்று.**

என்று குறிப்பிடுகின்றது.தொல்காப்பியரோ,

**பரிசில் கடை இய கடை கூட்டு நிலை.(தொல்:பொருள்:1037)**

என்று குறிப்பிடுகின்றார்.இதன் மூலம் பரிசில் பெற்றோர் தாம் பெற்ற பெரும் பொருள் குறித்து மிகுத்துச் சொல்லித் தாம் போகல் வேண்டும் என்பது பரிசிலர் விடைபெறுதல் துறையாகும்.

**வாழ்த்தியல்**

கூத்தர்,பாணர்,பொருநர்,விறலியர் போன்றவர்கள் அரசனைப் புகழ்ந்து பாடும் நிலையினைக் குறிப்பிடுதல் வாழ்த்தியல் துறை ஆகும்.

**விறலியாற்றுப்படை**

**திறல் வேந்தன் புகழ்பாடும்**

**விறலியை யாற்றுப்படுத் தன்று.(கொளு:219)**

வலிமை மிகுந்த மன்னனின் வெற்றி கீர்த்தியைச் சொல்லும் பாணிச்சியை வழிப்படுத்துவது,விறலியாற்றுப்படை என்று புறப்பொருள்வெண்பாமாலை குறிப்பிடுகிறது.மேலும்

**சில்வளைக்கைச் செவ்வாய் விறலி செருப்படையான்**

**பல்புகழ் பாடிப் படர்தியேல் - நல்லவையோர்**

**ஏத்த விழையணிந் தின்னே வருதியாற்**

**பூத்த கொடிபோற் பொலிந்து.**

சில வளையல்களால் சிறந்த கையினையும்,சிவந்த வாயினையும் உடைய பாணிச்சி பூசலிற் சிறந்த சேனையினை உடையான் தன் பல கீர்த்தியையும்;வாழ்த்திப் போவாயாயின்,நல்ல அவையிடத்து உள்ளோர் புகழ ஆபரணத்தைப் பூண்டு இப்பொழுதே மீள்பாவையால் மலர்ந்த வல்லியை ஒப்பப் பொலிவு பெற்றது எனப் புறப்பொருள்வெண்பாமாலை வருணிக்கின்றது.இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடும்போது,

**----------------------------------------- விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**

**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**

**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்.(தொல்:பொருள்:1037)**

விறலியர் போன்று பலர்,தாங்கள் வருகின்ற வழியிலே கண்ட தங்களை ஒத்தோரிடம் தாம் பெற்ற பெருஞ்செல்வம் போல அவருக்கும் கிடைத்தற் பொருட்டு இன்ன வழியே சென்று இன்னானை அடைவீர்களாயின் எம்போன்று பெருஞ்செல்வம் பெறுவீர் என்று ஆற்றுப்படுத்துவது என்று கூறுவார்.

## பரிசிற்றுறை

**மண்ணகங் காவன் மன்னன் முன்னர்**

**எண்ணிய பரிசி லிதுவென அரைத்தன்று.(கொளு:193)**

பூமியிடத்தைக் காக்கும் தொழிலையுடைய அரசன் முன்னே கருதியபோது இதுவெனப் புறப்பொருள்வெண்பாமாலை விளக்கம் தருகிறது.மேலும் இத்துறையை வருணிக்கின்ற போது,

**வரிசை கருதாது வான்போற் றடக்கைக்**

**குரிசினீ நல்கயாங் கொள்ளும் - பரிசில்**

**அடுகள மார்ப்ப வமரோட்டித் தந்த**

**படுகறி நால்வாய்ப் பகடு.**

இப்பாடல் மூலம்,யானையைப் பரிசாகப் பெரும் தன்மையை அறிய முடிகிறது.

## நிறைவுரை

இதுகாறும் கூறியவற்றின் மூலம் பாடாண்திணைப் பாடல்களின் வாயிலாகவும்,அதன் துறைச் சார்ந்தப் பாடல்களின் வாயிலாகவும் பண்டைய மக்களின் வாழ்வியல் பண்பாட்டையும், அரசனது வாழ்வியல் சிந்தனைகளையும் இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது.

## பார்வை நூல்கள்


1. அழகப்பன்.ஆறு.,ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை.
2. இராமலிங்கம்.என்.இ.,புறநானூறும் வாழ்வியலும்
3. இளம்பூரணார்.,தொல்காப்பியம் (பொருள்)
4. சுப்பிரமணியன் ச.வே.,தொல்காப்பியம் தெளிவுரை.
5. ஜெயராமன் நா.,சங்க இலக்கியத்தில் பாடாண்திணை
6. பாலசுப்பிரமணியன் கு.வெ.,சங்க இலக்கியத்தில் புறப்பொருள்
7. வரதராசனார் மு.,திருக்குறள் தெளிவுரை.

# AUTHOR GUIDELINES

**Peer Review Process**

All the submitted articles will be screened by screeners to make sure that they meet the aims and scope of the journal. The articles will then be reviewed by at least one external (peer) reviewer. Their comments will be passed to the authors and the authors' responses will be sent back to peer reviewers for their final review. The final version of the article will then be discussed at regular editorial board sessions and a final decision will be reached.

**Plagiarism**

The authors are not allowed to use text of previously published papers or manuscripts submitted elsewhere. All the references used in the paper should be duly acknowledged by the authors in the form of in-text citations / footnotes and the bibliography / references / works cited. The data collected from various secondary sources should be clearly indicated in appropriate places.

**Copyright Declaration Form**

The submitted, proof read and accepted articles will be published only on the receipt of copyright declaration form duly filled-in and signed by all the others or the corresponding authors on behalf of all the authors.

**Preparation of Manuscript**

Manuscripts must be written in English or Tamil.

Manuscripts should be prepared with wide margins and 1.5 line spacing throughout, including the abstract, footnotes and references. Every page of the manuscript, including the title page, references, tables, etc., should be numbered. Try to avoid the excessive use of italics and bold face.

**Use the following font specifications**

Use **Times New Roman** as the font.

**Title**: 14-point bold (title case and small case for sub-title), **Author's name**: 13-point bold, **Author's affiliation**: 13-point normal, **Headings**: 13-point bold, **Sub-headings:** 12-point italics, **Body text:** 12-point normal.

Manuscripts should be organized in the following order:

– Title page

– Body of text (divided by subheadings)

– Acknowledgements
– References

Headings and subheadings need not be numbered. Subheadings should be typed on a separate line, without indentation.

**Title page**
The title page should provide the following information:
– Title (should be clear, descriptive and not too long)
– Name(s) of author(s); please indicate who is the corresponding author
– Full affiliation(s) (designation, address of the institution)
– Complete address of corresponding author, including mobile number and e-mail address.

**Abstract**; should be clear, descriptive, self-explanatory and not longer than 300 words.
**Keywords**; 3-6 relevant keywords should be stated.

**Running title**: a shorter version of the title (40 characters at most) is needed.

**Introduction** should provide a context or background and specify the purpose or research objective of the study or observation.

**Materials and Methods**
Must indicate clearly the steps taken to acquire the information.
The software used for statistical analysis and description of the actual method should be mentioned.

**Results**: Should be presented in a chronological sequence in the text, table, and illustration. Organize the results according to their importance. They should result from your own study.

**Tables**
Number as Table 1, Table 2 etc, and refer to all of them in the text.
Each table should have a brief and self-explanatory title.·
Any explanations essential to the understanding of the table should be given in footnotes at the bottom of the table.

**Figures**
Number figures as Figure 1, Figure 2, etc and refer to all of them in the text. Each figure should have a self-explanatory caption. The captions to all figures should be typed below the figure.

**Discussion** should emphasize the new and important aspects of the study and the conclusions that follow from them. Possible mechanisms or explanations for these findings should be explored. The limitations of the study and the implications of the findings for future research should be explored.

**Supplementary Materials** such as questionnaires may be published on the online version of the journal.

**Acknowledgments :** Any technical help, general, financial, and material support or contributions that need acknowledging but do not justify authorship can be cited at the end of the text.

**References**

Discipline-Specific referencing style may be used by the authors / researchers.

**Reference list**

The list of references should only include works that are cited in the text and that have been published or accepted for publication.

**Footnotes**

Footnotes should only be used if absolutely essential. In most cases, it is possible to incorporate the information in the text.

If used, they should be numbered in the text, indicated by superscript numbers and kept as short as possible.

**Correction of Errata**

The journal will publish an erratum when a factual error in a published item has been documented.

**Scientific style**

Please always use internationally accepted signs and symbols for units, SI units.

**Online submission**

The full text papers are to be submitted via mail to mvmjournal@gmail.com

**Enquiry**

Any enquiry about the journal, its publication policy, subscription details or any other query related to MVM Journal of Research is to be mailed to mvmeditor@gmail.com.

# COPYRIGHT DECLARATION AND TRANSFER FORM

To

The Editor,
M V M Journal of Research
M V Muthiah Govt. Arts College for Women,
Dindigul - 624 001. Tamilnadu, India.

Sub: Copyright and Plagiarism Declaration

Madam,
This is to confirm you that I / We, ……………………..………………………………….
…………………………………………am / are contributing a paper for MVM Journal of Research, Vol………. , Year …………….

My / Our paper is entitled:
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
…………………………………………………………………………………………..…

The editor/s reserve the right to edit the paper and I/We agree to assign the exclusive right to publish, and to license for publication, the paper in whole and in part in all editions, forms and media in the English /Tamil language and in any translations. I / We confirm that no part of this article has been copied / lifted from any other publication. All quotations given within quotes have been supported with references with complete and correct bibliographic details. If it is found that there is a copyright violation the responsibility will remain with me and co-authors of the article (if any). I/we will pay for the damages as per law. I/We also agree that I/We will obtain permission for non-exclusive world rights to use material protected by copyright in the original and subsequent editions of the work and/or translations thereof.
I/We hereby agree to the above terms.

Signature:

Name of the Corresponding Author: …………………………………………………..

Address:

Cell: Date: ………………..

# JOURNAL SUBSCRIPTION FORM

Yes, I would like to subscribe MVM Journal of Research

**Subscription Detail for printed copy**

| SINGLE | ANNUAL | THREE YEARS |
|---|---|---|
| Rs. 800 | Rs. 800 | Rs. 2,200 |
| $ 30 | $ 30 | $ 130 |

From (Personal Name) :________________________ Position :____________________
Institution /Organization's Name:_____________________________________________
Institution/ Organization's Address : __________________________________________
_______________________________________________________________________
PIN Code: _________________ E-mail Address: ________________________________
Website (URL):_______________________________________________________
Tel. :___________________________ Fax:_______________________
Mobile:______________________

We are enclosing a D.D. for Rs. ___________________in favour of **"The Principal, M.V.Muthiah Government Arts College for Women", payable at Dindigul.**

D.D. No. : ______________ Bank Name: _____________________ Date: ____________

Or

We pay the amount of Subscription in cash

Signature ___________________________ Date:

Approved by (Office) _______________________ Date:

---------------------------------------------------------------------------------------------------------

Please fill in this order form and mail it to the Publisher

**Address of the Publisher**

CHIEF EDITOR
MVM JOURNAL OF RESEARCH
M.V. MUTHIAH GOVERNMENT ARTS COLLEGE FOR WOMEN
DINDIGUL – 624 001. TAMIL NADU, INDIA.
PHONE: (91)+451-2460120, FAX: (91)+451-2460120
e-mail: mvmjournal@gmail.com, mvmjreditor@gmail.com




www.mvmjournal.org



MGR Centenary Building